**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 11.09.2025

**அசல் வழக்கு எண்.128/2014**

**வா.சா.1 – பழனிசாமி, த/பெ.பெருமாள்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

உங்கள் அக்கா பாப்பாத்தி அம்மாள் என்பவருக்கு உங்கள் அம்மா அமிர்தம்மாள் அவருடைய தனிப்பட்ட சொத்தை கிரயம் எழுதி கொடுத்து விட்டார் என்றால் சரியில்லை. என்னுடைய அப்பா பெருமாள் என்பரது குடும்ப சொத்து ஆகும். சர்வே எண் 123/1A கூட்டு குடும்ப சொத்து என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த சொத்தை தவிர்த்து மற்ற சொத்துக்களில் பாகம் எதுவும் வேண்டாம் என்று பாப்பாத்தி அம்மாளிடம் நீங்கள் எழுதி வாங்கவில்லை என்றால் வாய்மொழியாக சொன்னது தான் எதையும் நான் எழுதி வாங்கவில்லை. சர்வே எண் 147/1 உங்களுடைய கூட்டுக் குடும்ப சொத்து இல்லை என்று சொன்னால் சரியில்லை அந்த சொத்தை அடமானத்திலிருந்து ரூபாய் 12000 கொடுத்து மீட்டேன். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ஆவணம் ரிஜிஸ்டர் ஆகவில்லை. தற்பொழுது உங்கள் பெயரிலோ அல்லது உங்கள் குடும்பத்தார் பேரிலும் அந்த சொத்து இல்லை என்றால் சரிதான். 87 சென்ட் சர்வே எண் 147/1 ல் இரண்டாவது பிரதிவாதி கங்காதரன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. நீங்கள் கூறுவது தவறு உங்கள் குடும்பத்திற்கு அந்த சொத்துக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. உங்களுக்கும் உங்கள் சகோதரர்களுக்கும் 1985 லிருந்து சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்று சொன்னால் சரிதான். அப்பொழுது நீங்கள் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்களே அனுபவித்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டீர்கள் என்றால் சரிதான். கூர்ச்சீட்டு எழுதியதாக சொல்கிறீர்கள் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. கூர்ச்சீட்டு அமலுக்கு வரவில்லை என்றால் சரியில்லை. கரும்பு விளைவித்ததாகவும் அது நன்கு

விளைந்ததால் அவர்களே சொத்தை எடுத்துக் கொண்டுதான் கூறுவது தவறு என்றால் சரியில்லை. நீங்கள் அனுபவித்து வந்த சொத்திற்கு மின்சாரம் வேண்டும் என்று கூறியதாக கூறுவது தவறு என்றால் சரியில்லை. மின்சாரம் உங்களுக்கு வழங்கப்படவில்லை என்றால் என்னுடைய சொத்து மின்சாரம் அடங்காததால் 20 ஆண்டுகளாக கரம்பாக இருக்கிறது. உங்களுக்கு எந்த விதமான சொத்தும் ஒதுக்கப்படவில்லை கரம்பாக இருப்பது தவறு என்றால் சரியில்லை. C பட்டியல் சொத்து எனக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. உங்களுடைய பிரமாண வாக்குமூலத்தில் 32 வது பத்தில் கூட்டுக் குடும்ப கணக்கை சரிபார்த்ததின் ரூபாய் 1,02,300/- ஐ கணக்கிட்டு ரூபாய் 79,000/- பாளையம் என்பவரிடம் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண் 28/1 அதனை நீங்கள் மற்றும் முதல் இரண்டு பிரதிவாதிகள் சேர்த்து விற்பனை செய்தீர்கள் என்றால் சரிதான். அதில் உங்களுக்கான பாகத்தை நீங்கள் வாங்கிக் கொண்டீர்கள் என்றால் சரியில்லை. அதை வாங்கி ராஜேந்திரன் நிலம் வாங்க பணம் கொடுத்தேன். உங்களுக்கு இடையே 1985 லிருந்து சொத்து பிரச்சினை இருப்பதாக கூறியுள்ளீர்கள் ஆகவே நீங்கள் பணம் கொடுத்தது தவறு என்று சொன்னால் சரியில்லை. அவ்வாறு கொடுக்கவில்லை என்றால் சரியில்லை. தேவகி பெயரில் கடந்த 1987 ஆம் ஆண்டு சில சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தனிப்பட்ட வருமானம் கிடையாது கூட்டுக் குடும்பத்தில் இருந்து வாங்கியது ஆகும். கூட்டுக் குடும்ப சொத்தில் இருந்து வாங்கியதாக கூறுவது தவறு அது அவரது தனிப்பட்ட வருவாய் இருந்து வாங்கப்பட்டது என்றால் சரியில்லை. ஆறாம் பிரதிவாதி பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் அது கூட்டு குடும்பத்தில் இருந்து வாங்கப்பட்டது ஆகும். கடந்த 1985 முதல் உங்களுக்கு என்று கூட்டுக் குடும்ப சொத்து இல்லை அது அவரது தனிப்பட்ட சொத்து என்றால் சரியில்லை. தகப்பனார் எப்பொழுது காலமானார் என்றால் 08.10.1979 ஆம் ஆண்டு காலமானார். அவர் காலமான பிறகு கூட்டுக் குடும்ப சொத்து என்கிற உரிமை அற்றுப் போய்விட்டது என்றால் சரியில்லை. உங்கள் தகப்பனார் இறந்த பிறகு கூட்டுக் குடும்ப நிலையிலிருந்து நீங்கள் பிரிந்து விட்டீர்கள் ஆகவே 1, 2 பிரதிவாதிகள் 5, 6 பிரதிவாதிகள் வாங்கிய சொத்து அவரது தனிப்பட்ட சொத்து நீங்கள் உரிமை கோர முடியாது என்றால் சரி இல்லை. உங்கள் பெயரில் வாலாஜாபாத் ஊரில் எத்தனை சொத்துக்கள் நிலங்கள் உள்ளன என்றால் என் பெயரில் எதுவும் கிடையாது. உங்கள் மனைவி பேரில் எத்தனை சொத்து உள்ளது என்றால் அவருக்கு ஒரு வீடு உள்ளது

நகையை விற்று ஒரு நிலம் வாங்கியுள்ளார் அவை அனைத்தும் அவரின் தனிப்பட்ட சொத்து ஆகும். அந்த வீடு நிலம் எப்பொழுது வாங்கினீர்கள் என்றால் நான் 1984 இல் வேலைக்கு சேர்ந்தேன். 1985 ஆம் ஆண்டு வாங்கினேன். என்னுடைய மனைவி அவருடைய பணத்தில் வாங்கினார். 1986 ஆம் ஆண்டு நீங்கள் தனி குடித்தனமாக சென்று விட்டீர்கள் என்றால் சரிதான். நீங்களும் உங்கள் மனைவியும் தனி குடித்தனம் சென்ற பிறகு உங்கள் சம்பாத்திய பணத்தை அனைத்தையும் நீங்களே தான் வைத்து அனுபவித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். கூட்டு குடும்பத்திற்காக எந்த செலவும் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு D பட்டியல் சொத்தில் மூன்றில் ஒரு பாகம் உண்டு என்று கூறுவது தவறு என்றால் சரியில்லை. C ஷெடுல் சொத்தில் உங்களுக்கு கொடுத்ததாக கூறுகிறீர்கள் அதில் நீங்கள் கரும்பு பயிரிட்டு 2000 ஆண்டு வரை அனுபவித்து வருகிறீர்கள் என்று சொல்வது தவறு என்றால் சரியில்லை. நீங்கள் ராஜேந்திரன் என்பவரிடம் அட்வான்ஸ் தொகை கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியில்லை. அவ்வாறு நீங்கள் பணம் கொடுத்திருந்தால் அவர் பதிவு செய்து கொடுத்திருப்பார் என்றால் சரியில்லை. தீய எண்ணத்துடன் கூர்ச்சீட்டில் கையொப்பன் போடவில்லை என்று கூறுவது தவறு என்றால் சரியில்லை. அவ்வாறு கூர்ச்சீட்டு எழுதப்படவில்லை என்றால் சரியில்லை. புளிய மரத்தை அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நாங்கள் அங்கு செல்வதில்லை. எவ்வித உரிமையும் கோர விடவில்லை. நீங்கள் கூட்டுக் குடும்பத்திற்காக உழைத்ததாக கூறுவது தவறு என்று சொன்னால் சரி இல்லை. உங்களை படிக்க வைத்தார்கள் என்றால் சரியில்லை. உங்கள் தகப்பனாருக்கு பாகமாக வந்த சொத்துக்களை பொருத்தவரையில் உங்களுக்கும் ஒன்று மற்றும் இரண்டு பிரதிவாதிகளுக்கும் 20ல் 6 பாகம் உரிமை உள்ளது எனவும் 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு 20ல் 1 பாகம் உள்ளது என்று சொன்னால் சரியில்லை. உங்கள் தகப்பனார் அவர் பெயரில் சில சொத்துக்களை வாங்கினார் என்றால் சரிதான். உங்களுக்கும் பெருமாளுக்கு பிறந்தவர்களுக்கும் தலா 6ல் ஒரு பாகம் உண்டு என்றால் சரியில்லை. அதேபோல் உங்கள் தாயார் கிரயம் பெற்ற சொத்தில் உங்களுக்கும் ஆறில் ஒரு பாகம் உண்டு என்றால் சரிதான். பிரதிவாதிகள் 1, 2, 5, 6 ஆகியோர் பெயரில் தனிப்பட்டவகையில் வாங்கிய சொத்துக்களில் உங்களுக்கு பாகம் கிடையாது என்றால் சரியில்லை. 3, 4 பிரதிவாதிகளுக்கு தலா ஒரு ஐட்ட சொத்துக்களை உங்கள் பெற்றோர்கள் கொடுத்து விட்டதால் அவர்களுக்கு பாகம்

இல்லை என்று கூற இயலாது என்றால் சரியில்லை. உங்கள் பாகம் தவறு என்றால் சரியில்லை. தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.